நபரின் பெயரை மட்டும் பல்கலைக் கழகத்திற்குச் சூட்டுவது, பிறரது கருத்தினை பாதிக்குமாதலால், இதனை தமிழ்ப் பல் கலைக் கழகம் என்றே அழைக்கலாம்''.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண் 47, டாக்டர் பெ. வீரபாண்டியன். வினா எண் 48-ம் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒரே பொருள் பற்றியவை. வினா எண். 48, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

47—

பேரணாம்பட்டில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.

*9592—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டில் தோல் பதனிடும் தொழிற்சாலை களின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) சுற்றுப்புறம் பாழ்பட்டிருப்பதால் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு தோல் வளர்ச்சி கழகத்தின் உதவியுடன் பேரணாம்பட்டில் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது. விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48—

நிலத்தடி நீர் மாசு அடையாமல் இருக்க நடவடிக்கை

*10070—திரு. சி. ஞானசேகரன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் ராணிப் பேட்டை, வேலூர், மேல்விஷாரம், நந்தியாலம், அரப்பாக்கம், கருகம்பத்தூர், முள்ளிபாளையம், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய